# கருமத் திருதி

## வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா

# கௌரவிப்பு மலர்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
அரிமாக்கழகம்-கோப்பாய்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய்,
இணையும் சான்றோர் கௌரவிப்பு

05-06-2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமத் திருதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,

அரிமாக்கழகம்-கோப்பாய்,

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய்,

இணையும் சான்றோர் கௌரவிப்பு



## வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா

# கௌரவிப்பு மலர்

05-06-2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த
வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராசா அவர்களைக்
கௌரவித்து "கருமத் திருதி" எனும் பட்டத்தினை வழங்கி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
சமூகத்தினர் வழங்கும்

# வாழ்த்துப் பாமாலை

ஏற்றினோம் தியாகத்தின் வழிவொன்று
எழிலது ஏற்றமே, பணி நன்று

காற்றிடை புகுந்து கானமாய் மொழிந்து
"கருமத் திருதி" யின் காத்திரம் தனை
போற்றிடப் பொழுதுகள் போதாமையாகுமே
ஆற்றிய பணி தனின் அற்புதம் சொல்ல....

விரிந்திட்ட கல்வியியல் விளைவினிலே–நின்
வினைத்திறப் பணிகளால் வியப்புறுதே
புரிந்திட்ட நல்சேவைப் புதுமையிலே
புலர்ந்து எம் கல்லூரி பூரிக்குதே!

மருத்துவ மாண்பினில் உயர்ந்தவரே–பொது
மக்களின் மனம் வென்று காப்பவரே
கருத்தினில், கடமையில் கல்வியியலை
காத்திடும் கமலத்தின் நேச உறவே!

சிந்தனை, சொல், செயல் சீரிய வழி சொல்லும்
வந்தனக் கல்லூரி வளமே,
தந்துமை எமக்கு தளிர் பணி செய்த
சொந்தமே அரும் பணிச் சொரூபே!

சிந்தனை அழகே, சிந்திடும் உழைப்பே,
சீர் மிகு பொதுப் பணி அரசே,
உந்தனை உணர்ந்தோம் உயர் வினைக் கண்டோம்
உன்னதமே நீடு நீர் வாழி!

பீடாதிபதி,
உபபீடாதிபதிகள், முகிழ்நிலை ஆசிரியர்கள்,
பதிவாளர், கல்விசார ஊழியர்கள்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

திருதி – திடம், உறுதி, மனவலிமை

கவியாக்கம் – மானிபூர் ரீ.கணேஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மண்ணில் பொதுப்பணிகள், வைத்தியசேவை, சமூகப்பணிகள், கல்விப்பணிகள் ஆற்றிவரும்

# "கருமத்திருதி"



**வைத்திய கலாநிதி லயன், வைத்திலிங்கம் தியாகராசா**

**தகப்பன்** : திரு. வைத்திலிங்கம்

**தாய்** : திருமதி வள்ளியம்மை

**பிறந்த இடமும் திகதியும்** : இருபாலை, கோப்பாய். 14-04-1946

**கல்வி** : கொ/தெமட்டக்கொட தமிழ் கலவன் பாடசாலை 1951 - 1952
கொ/சென்பற்றிக்ஸ் கல்லூரி 1953 - 1957
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 1958 - 1962
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 1963 - 1963
கொ/கொழும்பு மருத்துவக் கல்லூரி 1965 - 1967

**பணி** : உதவி வைத்திய அதிகாரி பூண்டுலோயா 1967 - 1976
உதவி வைத்திய அதிகாரி மதுறட்ட 1977 - 1983
தனியார் வைத்திய அதிகாரியாகப் பதிவு செய்து
வைத்திய சேவை 1983 - இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைகள்:

*இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் இணைவு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தலைவராகச் சேவையாற்றியமை (1984)

*இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் - யாழ் மாவட்டத் தலைவர் (2002 - இன்றுவரை)

*அரிமாக்கழகம் கோப்பாய் (Lions Club) இணைவு (கோப்பாய் தலைவர், மாவட்டத் தலைவர், வலயத்தலைவர், பிராந்தியத் தலைவர் யாழ் மாவட்ட இணைப்பாளர்

*கோப்பாய் புனரமைப்பு புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத் தலைவர்

*யாழ்ப்பாணம் புனரமைப்பு - புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத் தலைவர் (1996)

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆலோசனைச் சபை உறுப்பினர் 2000 - இன்று வரை கல்லூரி அபிவிருத்திக்குப் பெரும் தொண்டாற்றியவர்

*செஞ்சிலுவைச் சங்க தொண்டு வைத்தியர் - இலவச மருத்துவ சேவை வழங்குநர்

*அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் - யாழ் மாவட்டம் 2003

*பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவர்

*நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு தலைவர்

*சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகள் (மருத்துவம், கல்விச் சேவைகள்)

*உதவி தேவைப்படுவோர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் சேவை.

## குடும்பம்

**மனைவி** : இரஞ்சிதமலர்

**பிள்ளைகள்** : ரதிவதனி ஜெயரூபன் - ஆங்கில ஆசிரியை
ரிஸ்வி குணதாசன் - ஆங்கில ஆசிரியை
பிரசாந்தன் தியாகராசா - மருத்துவபீட மாணவன்

**மருமக்கள்** : எஸ். ஜெயரூபன் - பொறியியலாளர்
எஸ் குணதாசன் - வைத்தியர்

**சகோதரர்** : வி. சுப்பிரமணியம் - உதவி முகாமையாளர், மின்சார சபை

*- வித்தியாதாசன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்த ஆதீன சுவாமி
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியர்
அவர்களின்

# அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு:-

வைத்திய கலாநிதி தியாகராஜா அவர்களை கௌரவித்து யாழ்ப்பாணம் தேசியற் கல்வியியற் கல்லூரி விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். தனக்கென வாழ பிறர்க்கென வாழும் ஒரு சிலரில் திரு. தியாகராஜா அவர்களின் சேவை மிகவும் சிறப்புடையது. வைத்தியத்துறையிலும் ஏனைய துறைகளிலும் தனித்துவமான சேவைகளை ஆற்றுகின்றவர் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினூடாகவும் அனிமா கழகத்தினூடாகவும் சமூகத்திற்கு நல்ல பணியாற்றியவர். தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையும் செயற்பட்டு கல்லூரியின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்ற சிறப்பினை உடையவர். எல்லோருடனும் இனிமையாக பழகும் சபாவமும் செய்கின்ற செயலை ஒழுங்காக செய்ய வேண்டும் என்ற மனவிருப்பு உடையவர். கோப்பாய் இருபாலை மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று வாழுகின்ற வைத்திய கலாநிதி திரு. தியாகராஜா அவர்கள் பல பணிகளை ஆற்றி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். இந் நிகழ்ச்சியை நடத்துகின்ற தேசியற் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி உபபீடாதிபதி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டு கல்விப் பணியாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சரிய சுவாமிகள்
நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயரின் வாழ்த்துச் செய்தி

செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரான டாக்டர் வை.தியாகராஜா பெயர்போன சமூகசேவையாளர் ஆவார். அவருக்கு அவரின் பணிகளைப் பாராட்டி விழா எடுக்கப்படுகின்ற வேளையில் வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மக்கள் சமாதான நல்லிணக்கக் குழுவின் உபதலைவராகவும் சமாதான நீதவானாகவும் விளங்கும் இவர் தன்னுடைய பணிகளால் மக்கள் மத்தியில் ஒரு நல்லிடத்தைப் பெற்றவர். நல்ல பணி செய்பவர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவும் இன்னும் அதிக பணி செய்ய உற்சாப்படுத்தப்படவும் வேண்டும் என்கின்ற வகையில் இவருடைய பணிகளை நாம் வெகுவாக பாராட்டி வாழ்த்துகிறோம். இவரின் முன்மாதிரிகையின் வழியில் அனேகர் இதுபோன்ற சமூகநேயப் பணிகளைச் செய்ய முன்வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

யாழ். ஆயர்,<br>
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,<br>
ஆயர் இல்லம்,<br>
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமத் திருதி தியாகராஜா

- 2000 ஆம் ஆண்டு
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரசவம்
- பீடாதிபதி,
  நான் மட்டும் நியமிக்கப்பட்டேன்
- எப்படிக் காரியங்களை ஆற்றுவது?
  தனித்து
- டாக்டர். லயன். வை. தியாகராஜா
  முன்வந்து நின்றார்.
- சமூக நிறுவனங்களை எம்முடன் இணைத்தார்
- ஜெட் வேகத்தில்
  கருமங்கள் நடைபெற்றன.
- ஊரடங்கு வேளையிலும் செயற்பட்டார்.
- கல்லூரியை ஆரம்பித்தோம்.
- கருமம் ஒன்றைத் தொடங்கி விட்டால் கண்ணுறங்க
  மாட்டார் அவர்.
- குறிப்பிடும் நேரம் பிரசன்னமாகி விடுவார்.
- கல்லூரியை ஆரம்பித்து விட்டோம்.
- கட்டடம் வேண்டும்.
- எமது அன்றைய தேவை அதுதான்.
- பல முயற்சிகள் செய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லாவற்றிற்கும் பக்கபலமானார்;
டாக்டர் வை. தியாகராஜா.

- அவர் பக்கத்தில் நின்றதால் ஆயிரம் யானை பலம் எமக்கு.

- உலக வங்கியினை அரித்துக் கொண்டே இருந்தோம்.

- கடிதங்கள், தொலைபேசி, தொலைநகல் பறந்தன.

- எமது ஆய்க்கினை பொறுக்க முடியாது உலக வங்கியின்
உப தலைவர் கல்லூரிக்கு வருகை தந்தார்.

- ஒன்று கூடினோம்.

- கட்டடம் பற்றிப் பேச வேண்டாம்.
வேறு கதையுங்கள் என்பார்.

- எமது இன்றைய தேவை கட்டடம்தானே என்றோம்.

- "மூச் என்றார். அதிர்ச்சியானோம்.

- டாக்டர் எழுந்தார்.

- 30 நிமிடங்கள் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

- சூடு தணிந்தது.

- தலைமையகம் சென்று கலந்துரையாடி முடிவு தருவதாகக்
கூறினார்.

- முடிவு நல்லதாகவே வரும் என்றார் டாக்டர்.

- நல்ல முடிவே வந்தது.இடைக்கால ஏற்பாடாக 35 மில்லியன்
ஒதுக்கப்பட்டது.

- சில கட்டடங்கள் எழுந்தன
ஏனைய கட்டடங்கள் அமைவதற்கு அது கருவாகிற்று.

- ஏனையவையும் அமைக்க அனுமதி கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 460 மில்லியன் பெறுமதியான கட்டடங்கள் அவை.

- இன்று யாவும் நிறைவு பெற்று விட்டன.

- டாக்டரின் திருதி ( உறுதி ) வெற்றி பெற்றது.

- அதனால் எங்களுக்கு அவர் "கருமத்திருதி"

- எமது சமூகத்திற்கும் அவ்வாறே.

- அளவற்றவை அவரது சமூகப் பணிகள்.

- மிக அரிது இவ்வாறான மனிதர்களை இன்று காண்பது.

- மக்களுக்குச் சேவை செய்பவர்களும், மகான்களும் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

- அதற்காக இவ்விழா.

- அதனை எதிர்கால சமூக வழிகாட்டிகளான எமது முகழ்நிலை ஆசிரியர்களும், மற்றவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இவ்விழா.

- அவர் பணி மேலும் சிறக்க, உயர்ந்து வளர வித்தக விநாயகர் அருள் வேண்டி இவ்விழா.

- டாக்டர் லயன். வை. தியாகராஜா நீண்ட ஆரோக்கியமான வாழ்வு பெற கல்லூரிச் சமூகம் பிரார்த்திக்கின்றது.

நன்றி

கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்,
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்
## திரு. கே. கணேஸ் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

வைத்திய கலாநிதி லயன். வை. தியாகராஜா அவர்களின் சமூக - கல்விச் சேவையைப் பாராட்டி நடைபெறுகின்ற நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய சமூகச் சூழலில் பொதுமக்களுக்கான சமூக சேவைப் பணிகளின் தேவை அதிகரித்து வருகின்றது. ஆனாலும் இத்தேவையைச் சேவையாக ஆற்றுவதற்கு பலர் பின்நிற்கின்றனர். இந்நிலையில் சமூக சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்து வரும் லயன். வை. தியாகராஜா அவர்களின் பணி போற்றுதலுக்குரியது.

யுத்த அனர்த்தங்கள், சுனாமிப் பாதிப்புக்கள் என்பவற்றால் பாதிப்புற்று இருக்கும் மக்களுக்கு லயன்ஸ் கழகம், இலங்கைச் செஞ்சிலவைச் சங்கம், நல்லெண்ணத்திற்கும் சமாதானத்திற்குமான மக்கள் குழு எனப் பல பொது அமைப்புகளின் தலைவராக இருந்து சேவையாற்றியதுடன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பித்து இன்றுவரை அதன் வளர்ச்சிக்கு சேவையாற்றுபவர்களில் முக்கியமானவராகவும் கடமையாற்றி வருகின்றார்.

நன்றி மறவாத கல்வியியற் கல்லூரிச் சமூகம் அவரது சேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து ஏற்பாடு செய்த இப்பாராட்டு விழா சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. கணேஸ்
யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின்
# வாழ்த்துச் செய்தி

டாக்டர் லயன் திரு. வி. தியாகராஜா அவர்கள் எமது மக்களுக்கு ஆற்றும் பணிகளை நான் நன்கு அறிவேன். லயன்ஸ் கழகத்தினூடாகவும், செஞ்சிலுவைச் சந்தகத்தினூடாகவும் எமது சமூகத்திற்கும் ஆற்றும் பணி மகத்தானது. சிறந்த வைத்தியராகத் திகழுகின்ற அதே வேளையில் அல்லலுறும் மக்களின் அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு அவர் ஆற்றும் பணி மிகப் பெரியது. அவரது வலதுகை கொடுப்பது அவரது இடதுகைக்கே தெரியாது. தனித்துவம், சமூக நிறுவனங்களுடன் இணைந்தும் அவர் ஆற்றும் பணி காலம் கடந்தும் பேசப்படும் என்பது எனது நம்பிக்கை.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சியிலும் செயற்பாட்டிலும் அதன் பௌதிகவள மேம்பாட்டிலும் அவர் அதிக கரிசனை காட்டிப் பாடுபட்டு உழைத்து வருவதை யாவரும் அறிவர்.

கல்வியியற் கல்லூரிச் சமூகம் நன்றி மறவாது அவரது சேவைகளைப் பாராட்டிக் கௌரவிப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

டாக்டர் லயன் திரு. தியாகராஜாவின் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

பேராசிரியர் எஸ். மோகனதாஸ்
துணைவேந்தர்.
27.05.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுச் செய்தி

தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிய சான்றோர்களைக் கௌரவிக்கும் சிறப்பிதழுக்கு பாராட்டுரை வழங்குவதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். இந்த வகையில் இக் கல்லூரியின் உருவாக்கலுக்கும் வளர்ச்சிக்கும் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை தொடர்ந்தும் பல வழிகளில் தன்னுடைய அளப்பரும் சேவையினை அர்ப்பணித்துப் பாடுபட்டவருபவர்களில் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா அவர்கள் என்றென்றும் பெருமைக்குரியவர். லயன் தியாகராஜா அவர்களின் மனதாபிமான சேவையினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கோப்பாய் அரிமாக்கழகமூடாக நான் அறிந்து கொண்டாலும் இக் கல்விசார் துறைக்காக இவருடைய பங்களிப்பு மிகவும் போற்றுதற்குரியது. பலவிதமான துறைகளில் ஆசிரிய வளங்களைக் கல்விச் சமூகத்திற்கு பெருமையுடன் தந்து மிளிர்ந்து விளங்கும் இக் கல்லூரியின் நற்பணிக்கு அயராது பாடுபடும் லயன் தியாகராஜா அவர்களினால் எங்களுடைய அரிமாச்சங்கமும் மிகவும் பெருமை கொள்கிறது. இவ்வாறாக தன்னுடைய உயரிய பணியினை கல்விச் சமூகத்திற்கு ஈந்து வழங்கும் பெருமகன் லயன் தியாகராஜா அவர்களும் மற்றும் இக் கல்வியியற் கல்லூரியும் சிறப்புடன் மென்மேலும் பெருமை கொள்ள எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டுகின்றேன்.

லயன் செ. ஞானராஜா
பிரதி மாவட்டச் செயலர் - வடக்கு
சர்வதேச அரிமாச்சங்கங்கள் - மாவட்டம் 306B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான சேவையாளனை கௌரவித்தது பொருத்தமானதே!

வைத்திய கலாநிதி வைத்திலிங்கம் தியாகராசா அவர்களை யாழ். கல்வியியல் கல்லூரி வருடாந்த கௌரவிப்பு நிகழ்வில் இம்முறை கௌரவிக்க உள்ளமை பற்றி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். கல்வியியல் கல்லூரி இந்த மண்ணில் ஆரம்பமாவதற்கு உழைத்த பெருந்தகைகளுள் இவரும் முக்கியமானவர். பொதுச்சேவையில் பாரிய பங்கெடுத்து அல்லற்படும் மக்களை அரவணைத்து சேவையாற்றுவதில் வைத்திய கலாநிதி வை. தியாகராசா அவர்களுக்கு நிகர் அவரேயாவர். தன்னலம் கருதாது தனது உழைப்பில் ஒரு பகுதியையும் பொதுச்சேவைக்கு அர்ப்பணித்து பலரும் அறிந்த உண்மை. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கழகம், மற்றும் உள்ளூர் பல அமைப்புக்களில் பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து தான் வகிக்கும் பதவியின் மூலம் அந்நிறுவனத்தினை சேவைமூலம் உயர்த்தும் பக்குவமும், ஆற்றலும், அனுபவமும் வாய்ந்தவர்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையில் கௌரவ தலைவராக சேவையாற்றிக் கொண்டிருக்கும் வை.தியாகராசா அவர்கள் நலிந்த மக்களுக்கான பல திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. "சுனாமி" அனர்த்தத்தின் போதும், அதன் பின்னரும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி சேவையாற்றினார். பல உலக சகோதர செஞ்சிலுவைச் சங்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மேலும் நலிந்த மக்களுக்குச் சேவையாற்ற முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா அவர்களை கௌரவித்து பாராட்ட வேண்டுமென எடுத்து தீர்மானம் கல்வியியல் கல்லூரி சிறந்த முறையில் இயங்குகிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இவரது சேவை தொடர வாழ்த்துவதுடன், கல்வியியல் கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடைந்து கல்வியியலாளர்களை உருவாக்க வேண்டுமெனவும் இறைவனை வேண்டுகின்றேன்.

தி. உதயசூரியன், J.P
கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையாளர்

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகலாம்
பேரறிவாளன்" என்பது வள்ளுவம்.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா அவர்கள் மக்கள் மனம் கவர்ந்த புனிதப் பணியாளன். சமாதான நல்லெண்ணக் குழு உபதலைவராக பணியாற்றுபவர்.

"யாரோடும் பகை கொள்ளிலன் என்றபின்
போரொடுங்கும் புகழொடுங்காது"

என்ற வசிட்ட வாசகத்திற்கு ஒளி கொடுக்க இயங்கும் எங்கள் நிறுவனப் பணியில் நெஞ்சாரப் பணிபுரிவார்.

அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடைய கொடையாளி. சிரித்த வதனம், சிந்தை விரித்து செயலாக்கம் புரியும் சீர்மை. காலத்தின் மேவை உணர்ந்து காரியம் ஆற்றும் வல்லாளனைச் சமூகம் மறக்காது. இந்தப் பணியாளரின் அணிநலம் கண்டு பாராட்டுப்பெறும் இவ்வேளை உரிமையோடு நிறுவனத் தலைவன் என்ற பூறையில் நெஞ்சம் தழைக்க சில வார்த்தைகள் உதிர்தல் என் கடமையாகும்.

அவர் பணி மண்ணுக்கு என்னும் வேண்டும். "எப்போதும் தாயாரக இரு" எனும் சாரணீய மகுட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிற்கேற்ப வாழ்பவர் இவர். அன்னார் தமது குணநலன்களில் ஒரு காந்தீயவாதி.

எளிமை, இனிமை, அடக்கம், சிநேக மனப்பான்மை, அடுத்தவரை மதிக்கும் தன்மை போன்ற பல அரிய குணங்களை உடைய இவர் வடபிராந்திய கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதால் பெற்றோர், ஆசிரியர் மனங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

மேன்மக்கள் எங்கும் எவ்விடத்தும் எப்போதும் மேன்மக்களே. அத்தகைய மாந்தர் மத்தியில் மாணிக்கம் போன்றவர் எமது நண்பரும் வைத்தியருமான "தியாகு"

எப்போதும் நல்லதையே எண்ணி நன்றாகவே செய்து முடிக்கும் கர்மவிரன் அவர்களது ஈடற்ற இனிய சேவை இனிதே தொடர இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.

Dr. அருமைநாயகம்.
தலைவர்,
சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகச் செம்மல்

லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா அவர்கள் ஓர் சான்றோன் என கல்வியியற் கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்படுவதை அறிந்தும் பெரும் மகிழ்ச்சி அடைந்தேன். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மாணவனாக இருந்த காலம் தொடக்கம் இன்றுவரை அவருடைய நற்பண்புகளையும் தன்னலம் கருதாத சேவைகளையும் நன்கு அறிந்தவன் என்ற வகையில் இப்பாராட்டுரையை வழங்க நான் கடமைப்பட்டுள்ளேன். கோப்பாய் லயன்ஸ் கழகத்தில் அங்கம் வகித்து பின் மாவட்ட ரீதியிலும் தலைமைப் பதவி வகித்துள்ளார். இதைத் தவிர இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு பெரும் தொண்டாற்றி வருவதை யாவரும் அறிவார். இவர் ஒரு போதும் பதவியை நாடி செல்பவரல்லர். பதவி இதுவரை நாடி வந்ததென்றால் அது மிகையாகாது. "இல்லை என்று இவரின் உதவியை நாடியவருக்கு இல்லை" என்று பதில் அளிக்காத பெருந்தகை பள்ளிக்கூடங்கள் மற்றும் ஏழை மாணவர்கள் பலருக்கு உதவியமை தனிப்பட்ட முறையில் எனக்கு தெரியும். எதுவித புகழையும் விரும்பாத ஓர் தாராள மனப்பாங்கு படைத்த ஒரு பரோபகரா செம்மல். இத்தகையவர்கள் இன்றைய சமுதாயத்தில் அரிது என்றே கூறலாம்.

சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு தான் ஊடாக வகிக்கும் லயன்ஸ் கழகம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக கால நேரம் பார்க்காது தொழில் புரிந்ததை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவருமறிவோம். இவையாவும் அவருடைய அர்ப்பணிப்பை யும் தன்னலம் கருதாத சேவையையும் எடுத்துக் காட்டுகின்றது.

இறுதியாக கூறினாலும் மிக முக்கியமாக குறிப்பிட வேண்டியது. யாழ். கல்வியியற் கல்லூரி சம்பந்தமாக இவர் எடுத்த ஆரம்ப முயற்சிகளாகும். நிரந்தர கட்டிடமின்றி, தளபாடங்களின்றி கற்றல் உபகரணங்களின்றி இக் கல்லூரி தத்தளித்த போது உதவிய பலருள் இச்சான்றோனும் ஒருவர். பொருத்தமானதொன்றாகும். இதைப்பற்றி இரண்டு அபிப்பிராயங்களுக்கு இடமே இல்லை என்றே கூறலாம். எங்கள் கிராமமான கோப்பாயின் மைந்தன் என்ற வகையில் இப்பாராட்டுரையை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் இச்சமூகத் தொண்டனுக்கு நீண்ட ஆயுளும், மன அமைதியும் சகல சௌபாக்கியங்களும் அருள்வாராக.

வீ. சோமசுந்தரம்.
இளைப்பாறிய உபஅதிபர்,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆலோசனைச்சபை உறுப்பினர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்**

# ஆசிச் செய்தி

வைத்தியகலாநிதி லயன் வி. தியாகராஜன் இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரியினால் கௌரவிக்கப் படவுள்ளார். இது ஒரு நீண்ட கால அன்புப் பிணைப்பின் புலப்பாடாகவும், செய்த பேருதவிகளையெல்லாம் நாம் மறக்கவில்லை, மறக்கமாட்டோம் என்று கல்வியியல் கல்லூரிச் சமூகத்தினர் நன்றி கூறுவதாகவும் அமையும் ஒரு நல்ல நிகழ்வு. இச்சிறப்பினைப் பெறும் லயன் தியாகராஜன் பெயருக்கேற்றபடி தியாக உள்ளமுடையவர். அவர் வகிக்கும் பதவிகளை நோக்கினால் இவ்வுண்மை புலப்படும்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் தலைவராக இவர் பணியாற்றுகிறார். போராட்ட காலங்களிலே ஆற்றப்பட்ட இச்சங்கத்தினுடைய பணிகள் நாம் மறக்கமுடியாதவை. அச்சங்கத்தின் நடமாடும் மருத்துவ சேவைக்குழுவிலே ஒருவராக இருந்து பலருடைய பிணித்துன்பம் தீர்க்கும் சேவையாளனாக இயங்கிவருகிறார். யாழ்ப்பாண மாவட்டத்திலே உள்ள பல சமூக நிறுவனங்களிலே தலைவராகவோ உறுப்பினராகவோ இருந்து பணி செய்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே லயன்ஸ் கழகம் தன்னுடைய அரிய சமூக சேவைகளை ஆற்றிவருகின்றது. இதனை நான் அனுபவ அடிப்படையிலே கூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கழகத்தின் உறுப்பினராக நீண்ட காலமாக இருந்து தன் பணிகளை ஆற்றிவருகிறார். லயன் தியாகராஜன் யாழ்ப்பாண மாவட்டப் பேராயருடைய மனையிலே அமைந்து இயங்கி பணியாற்றிவருகிறார். லயன் தியாகராஜன் கோப்பாயைச் சேர்ந்தவர். அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்காகவும் இவர் அரும்பணி செய்து வருகிறார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரி இங்கு அமைக்கப்படுகின்ற காலத்தில் அக்கல்லூரிச் சமூகத்தினர் மிகுந்த இடர்பட்டனர். இவ்வேளையிலே அவர்களுக்குத் தந்தை போலவும் நண்பன் போலவும் இருந்து காலத்தினால் செய்யக்கூடிய சேவைகளையெல்லாம் லயன் தியாகராஜன் செய்துவந்துள்ளார். கல்லூரிச் சமூகம் அவரை ஒரு போதும் மறந்துவிடமுடியாது. இன்று கல்லூரி கட்டடங்கள் எல்லாம் நல்ல வகையிலே அமைவுற்று புதுபொலிவுடன் திகழும் வேளையிலே தாம் வந்த வழியினை ஒரு தடவை திரும்பிப் பார்த்த இவர்கள் தம்முடைய நன்றியினைத் தியாகராஜனுக்குப் பலரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்துகின்றனர்.

பேராசிரியர். அ. சண்முகதாஸ்.
இயக்குனர் ஊடாக வளம் மற்றும் பயிற்சி மையம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கருமத் திருதியின் காத்திர பணிகள்...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியகலாநிதி வை. தியாகராசா

கல்வியியலாளர்கள் சிறந்த கிராமங்களில் ஒன்றான கோப்பாயில், பொதுசன சேவைகள் பலவற்றிலும் முன்னின்றுழைத்து - கோப்பாயின் முதற்பிரசை ஏற்ற பாராட்டையும் பெற்றுள்ள பெரியராவர் இவர். சென்றகால யுத்த அனர்த்தங்களினால் எமது கிராமம் பெரிதும் பாதிக்கப்பட்டபோது - கோப்பாய் புனர்வாழ்வு புனரமைப்புக் கழகம் அமைத்து, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் நிறுவனங்களையும், மற்றும் தொடர்புடைய அரச நிறுவனங்களையும் அமைத்து நல்லூர் சங்கிலியன் தோப்பிற்கு முன்னாள் உள்ள - எயிட்ஸ் மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டங்கள் வைத்து கலந்துரையாடி பல நிவாரணங்களும் பெறப்பேருதவி புரிந்த பெரியார்.

கோப்பாய் அரச செயலகம் கட்டுதற்கான காணி வாங்கி மதில் கட்ட, வேண்டியநிதி சேர்ப்பதற்கு முன்மொழிந்து தானும் உதவி ஆவன செய்தனை யானறிவேன். யாழ்ப்பாணத்தில் கல்வியியல் கல்லூரி ஆரம்பம் - என்பதறிந்து அதற்கான காணிகள் பெறவும் முயற்சித்த மூன்று காணிகளையும், பார்வையிடவந்த திணைக்ளத்தார்க்கும் காட்டி ஆவன செய்தார். அவற்றுள் ஒன்றான கூடம்பத்தைக் காணியிலேயே கல்வியியற் கல்லூரி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

டாக்டர் வை. தி. கைதொட்டார் வருத்தம் மாறும் என்ற நம்பிக்கையுடனேயே நோயாளிகள் சென்று காட்டிச் சுகமடைவர். இதனால் வை. தி. கைராசிக்காரன் என்பது மக்கள் நம்பிக்கை.

அவரைக் கௌரவித்து கல்வியியல் கல்லூரியில் உபசாரவிழா நடப்பதறிந்து மிக மகிழ்வடைகிறேன். அவர் மேலும் பல்லாண்டு சுகம் பெற வாழப் பிரார்த்திக்கின்றேன்.

க. இ. குமாரசாமி.
கோவைகிழார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலம் கருதாக் கருமத் திருதி
# லயன் வை. தியாகராஜா

இன்றைய உலகளாவிய மனிதத்துவ வாழ்வுக்கு அடிப்படைகளாக சமூக அபிவிருத்திக்கு அச்சாணிகளாகப் பரிணமிக்கும் சக்தி: சமூக சேவை ஊடாகவே பிரதிபலிக்கின்றது. மனிதவள அபிவிருத்திக்கான முதற்காரணியாக யுனெஸ்கோ நிறுவனம் மனிதர்களின் சமூக சேவை மனப்பான்மையை எடுத்தியம்புகின்றது. இன்றைய உலகிற்கும் குறிப்பாக எமது தேசத்திற்கும் இச்சேவையின் தேவை பெருகி வருகின்றன. சமூக சேவை என்றவுடன் பெரும்பாலனவர்கள் விலகி நிற்கின்ற கொடுமையான இன்றைய சூழலில் தன்னலம் கருதாத ஒரு சமூக சேவையாளராக, மனிதவள அபிவிருத்தியாளராக வைத்தியக் கலாநிதி. லயன். வை. தியாகராஜா அவர்கள் எமது மண்ணில் நிமிர்ந்து நிற்கின்றார்.

அவருடைய பன்முகப்பாகங்களான சமூக சேவைகள், அர்ப்பணிப்புகள், தியாகங்கள் "யுத்தத்தாலும், சுனமி அர்த்தங்களினாலும் நிர்க்கதியான மக்கள் வாழ்க்கையில் அவர்களுக்குச் சாதகமான அபிவிருத்தியை விரைவாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். "என்ற அவாவுடனே மேற்கொள்ளப்படுகின்றன. நிர்மலமான உள்ளத்தோடு எதையும் எதிர்பார்க்காமல் அவர் செய்யும் சேவை ஏனையவர்களில் இருந்து அவரை அதிசய மனிதராக வேறுபடுத்திக் காட்டுகின்றது. தனிமனிதராக நின்று மக்கள் சேவையில் பேரின்பம் கண்ட தியாகச் செம்மல் பொது நிறுவனங்களுடன் இணைந்து மிகப் பரந்த அளவில் தன் சமூக, கல்விச் சேவைகளை விஸ்தரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொற்களை விடச் செயல்கள் உரத்த குரலில் பேசும்" என்பதற்கமைய பேசுவதை விட செயலிலே பலவற்றைச் செய்து சாதனை படைத்துக் காட்டியவர் அவர். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களினதும், வறியவர்களினதும், சார்பாக பல பணிகளை விளம்பரம் இல்லாமல் ஆற்றிவரும் சேவையாளராகவும், தொண்டராகவும் இருந்து வரும் வைத்தியக் கலாநிதி. வை. தியாகராஜா அவர்களின் பணிகளை மேலும் ஆழமாக நோக்குகின்ற போது "ஒரு உயர்ந்த மனிதத்துவம் பொதித்த ஒரு மனிதராக அவரைக் காணமுடிகின்றது. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கழகம், அரச சார்பற்ற இணையங்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, நல்லெண்ணத்திற்கும் சமாதானத்திற்குமான மக்கள் குழு, கோப்பாய் புனரமைப்பு என்பவற்றினூடாகத் தனது ஆளுமைகளை ஒருங்கிணைத்து, மக்களுக்கான சமூக சேவையை விஸ்தரித்ததுடன், தன்னுடன் அர்ப்பணிப்பான நல்ல மனிதர்களையும் இணைத்து தேசப்பற்றுள்ள, மண்பற்றுள்ள பெரும் தொண்டுகளை ஆற்றி வருகின்றார். இன்றைய சமூகச் சூழலில் இவர் போன்ற ஒரு சில பெரு மனிதர்களின் சேவைகளால் தான் எமது தேசம் ஏதோ ஒருவகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வகையில் வைத்தியக் கலாநிதி. லயன். வை. தியாகராஜா சிறந்த சமூகசேவை முகாமையாளராக, தலைமைத்துவ ஆளுமை உடையவராக கல்வியற்துறை அபிவிருத்திக்கு வழிகாட்டுநராக தனது சேவைகளை எம் மண்ணில் ஆழப்பதித்துள்ளார்.

**தலைமைத்துவ ஆளுமை:**

பொதுவாக பல்வேறு விடயங்களை நடைபெறச் செய்பவர்கள் மூன்று வகையாக நோக்கப்படுகின்றார்கள். ஒன்று என்ன நடந்தது என்பதை அறியாதவர்கள், மற்றையது என்ன நடக்கின்றது எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டு இருப்பவர்கள், மூன்றாவது விடயத்தை நடப்பிப்பவர்கள். இவர்களில் மூன்றாவது, வகையினரின் தலைமைத்துவ தன்மை கொண்ட பொன்மயமான ஆளுமையுடையவராக வைத்தியக் கலாநிதி. லயன். வை. தியாகராஜா திகழ்கின்றார். தலைமைத்துவ ஆளுமை என்பது ஒரு கலை. ஒரு நோக்கை அடையச் செய்ய மற்றவர்களை ஒழுங்குபடுத்தி வெற்றிக்கான வைப்பது தலைமைத்துவ ஆளுமையாக மிளிர்கின்றது.

தலைமைத்துவம் நல்ல பலாபலன்களைத் துரிதகதியில் பெற்றுத்தரும் ஆற்றல் கொண்டது. இவ்வாறான ஆற்றல்களைத் துரிதகதியில் பெற்றுத்தரும் பொதுச்சேவையை மக்களுக்கு ஆற்றினார். அவை.

* கஷ்டமுறும், பிரச்சனைகளையுடைய பொது மக்களின் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்ற தன்னளவிலும், தான் சார்ந்த நிறுவனத்தினூடாகவும் முயன்று சேவையாற்றினார்.

* பொதுச் சேவைக்கான அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயித்து அவற்றினை எய்துவதற்கு, தன் வழிகாட்டலுக்கு உட்பட்டோரை ஊக்குவித்தார். எதிர்காலவியல் நோக்கிச் சிந்தித்தார்.

* பல்வேறு சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் புதுமையான உத்திகளை, நட்புறவான அணுகுமுறைகளினூடாக வெற்றி கண்டார்.

* தான் ஆற்ற வேண்டிய கருமங்களை ஈடுபாட்டுடன் அணுகி அவை எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் எனத் திட்டமிட்டு நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றிச் செயலாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பொதுச் சேவைகளுக்கு ஏனையவர்களின் உதவிகளைச் சிறப்பாகப் பயன் படுத்தினார். பெருந்தன்மையாளராக செயலாற்றினார்.

* எவ்விடத்திலும் தனது பங்களிப்பை அளிப்பதில் முன்னின்றார்.

இவ்வாறான சிறந்த தலைமைத்துவ ஆளுமையை பல்வேறு கருமங்களில் செலுத்தி உறுதியான வெற்றிகளை கண்டதினாலேயே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர் அவருக்கு ""கருமத்திருதி" என்ற பட்டத்தை வழங்கி சான்றோராகக் கௌரவிக்கின்றார்கள்.

**கல்வியியற் பரிமாணம்:**

தான் சிறந்த கல்வியைப் பெற்றதுடன் தான் வாழும் சமூகமும் சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்பதில் மிக உறுதியாகச் செயற்பட்டவர் திரு. தியாகராஜா அவர்கள். கல்வியின் அடிப்படை நோக்கமானது பௌதீக அறிவியல் சுய உணர்வு அறிவியல் என்பன ஒருங்கிணைந்த பூரண மனிதனைத் தோற்றுவித்தல் என்பதாகவுள்ளது. இந் நோக்கமானது மேலும் ஒருவரை தன்நிலை அறிவுத் தன்மையடையவராக மிளிரச் செய்கின்றது.

இதன் விளைவாக ஒருவர் தன்னிலை அறிவுத் தகைமை உடையவராக விருத்தியடைந்து தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்திற்கும் அதன் அங்கத்தவராக இருந்து உதவி புரிய வைக்கின்றது. தனது பணிகளை மற்றவர்களுக்காக ஆற்றுவதில் செயற்றிறன் மெய்யுணர்வு, பலம் பொருந்திய குண இயல்புகள் ஆகியவற்றை உடையவராக்குவதுடன் சமூக சேவையில் உளத்திருப்தியையும் ஏற்படுத்துகின்றது. இவ்வாறான கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை நோக்கிற்கடைய செயலாண்மைத்திறன் (Administrator) கொண்டவராக செயலாற்றி வருபவர் திரு. தியாகராஜா அவர்கள். இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000-05-02 ம் திகதி தோற்றம் பெற்றமைக்கும் இன்று அது மிகப்பெரும் பரப்பளவில் 450 மில்லியன் ருபா செலவில் சிறந்த கட்டடத் தொகுதியில் செயலாற்றுகின்றமைக்கும் காரணமாக பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் அவர்களுக்குத் தோளோடு தோள் கொடுத்து சாதனை படைத்ததை எடுத்துக்கூறலாம். மேலும் யுத்தத்தாலும் சுனாமித்தாக்க அலையாலும் பாதிப்படைந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குப் பல பொது அமைப்புக்கள் ஊடாகச் சேவையாற்றி வருகின்றார்.

தற்போதைய நவீன உலகில் பூரண கல்வி தொடர்பான நடத்தைப் பண்பாட்டுக்கல்வி முக்கிய இடம் பெறுகின்றது. தனிநபரும் - சமுதாயமும் வாழ்க்கையைச் செழிப்புள்ளதாக்கும், போஷாக்கும், அர்த்தமுள்ளதாக்கும் மானுடத்துவ குணத்தை வழங்குவதாக நடத்தைப் பண்பாட்டுக் கல்வி உள்ளது. இது மானுட விழுமியங்களுடன் தொடர்புடையது. நற்குணம், பிறருக்கு உதவுதல், தர்மம், நேர்மை, சேவையில் திருப்தி, மதினதத்தன்மை, ஆன்மீகஞானம் என்பவற்றினூடாக மானுடத்தை செழிப்புள்ளதாக்குவது எதுவோ அதுவே நடத்தைப் பண்பாட்டுக் கல்வியாகின்றது. இதற்கு முன்மாதிரியாக தன் வாழ்வை அமைத்துச் செயற்படுத்திக் காட்டிக் கொண்டிருப்பவராக திரு. தியாகராஜா அவர்கள் உள்ளார்.

**மருத்துவ சேவை:**

மானுடவியல் தர்மத்தில் மிக உயர்வான சேவையாக மதிக்கப்படும் மருத்துவ சேவையை மிகச் செம்மையாக, "செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலே தெய்வம்" என்ற வகையில் ஆற்றிவருபவர் வைத்திய கலாநிதி அவர்கள். மிகச் சிறந்த மனிதாபிமானியாக (Humanist) மக்களை நேசித்து அவர்கள் நோயைக் குணமாக்கும் செல்வாக்குடைய வைத்தியராக இருப்பதுடன் லயன்ஸ் கழக மருத்துவ சேவை, செஞ்சிலுவைச் சங்க தொண்டர் மருத்துவ சேவைகளை தூரவுள்ள கிராமப்புர ஏழை மக்களுக்கு ஆற்றிவரும் பெரும் பணியையும் செய்து வருகின்றார். யுத்தத்தாலும், சுனாமி அனர்த்தங்களாலும் பாதிப்படைந்த மக்களுக்குத் தன்னையே அர்ப்பணித்து இன்றுவரை சேவையாற்றி வருகின்றார்.

தனது மருத்துவ சேவையை தனியாகவும், மற்றும் ஏனைய பொது அமைப்புக்களுடன் இணைந்து பரந்த செயல் முறையினூடாக மனித பேதங்களைக் கடந்து செயலாற்றி வரும் நல்ல மனிதரான வைத்தியக் கலாநிதி வை. தியாகராஜா அவர்கள் முரண்பாடுகளைத் தீர்த்து ரீதியான சமூக வாழ்வுக்கும், சுதந்திரமான மனித வாழ்வியலுக்கும் அணி சேர்க்கும் வகையில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துகுமான மக்கள் குழு அமைப்பில் உப தலைவராக இருந்து பல சேவைகளை ஆற்றி வருகின்றார். அவருடைய இச் செயற்பாடுகளை எண்ணும் போது Julia Fletcher Carney அவர்களின் மேற்கோள் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

"Little deads of Kindness
Little words of love
Help to make earth happy
Like the heaven above"

"ஒவ்வொரு குறுகிய வார்த்தைகளும், வானத்தின் இன்பத்தைப் பூமிக்குக் கொண்டு வருகின்றன. ஆகவே ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையில் மக்கள் சேவைக்காகத் தொண்டர்களை ஒன்றுபட வைத்து சமூக சேவையாற்றி வரும் தியாகச் செம்மல போற்றப்பட வேண்டிய பெரு மனிதராகத் திகழ்கின்றார்" பண்பாட்டாளர்.

இன்றைய எமது சமூகச் சூழலில் பண்பாடு கலாச்சாரம், விழுமியங்கள் தொடர்பாகப் பல விமர்சனங்கள் உள்ளன. தமிழின மேன்மையை இன அடையாளத்தைச் சுட்டி நிர்பவை எமது பண்பாட்டு அம்சங்களேயாகும். இவ் வகையில் தமிழைப் பண்பாட்டு பாரம்பரீய அம்சங்களைக் காக்கும் பெரும் சேவையாளராகவும் வைத்திய கலாநிதி. லயன். வை. தியாகராஜா திகழ்கின்றார். பாரம்பரீய கலைகள் மேம்பாட்டுக்கழக தலைவராக இருந்து பல வருடங்களாக பாரம்பரியக்கலைகளை எம் மண்ணின் வாசனையுடன் பல்வேறு நிகழ்வுளாகப் பரணமிக்க நிதி, சரீர உதவிகளை வழங்கி வருகின்றார்.

அவரது குடும்பமே ஒரு பண்பாட்டுக் குடும்பம் மனைவியார் திருமதி தி. ரஞ்சித மலர்கள் தனது தியாகமனப்பான்மையடன் கூடிய குடும்பப் பொறுப்பான தலைவியாக இருந்து பணியாற்றுகின்றார். இவ்வாறே மக்கள் திருமதி ரதிவதனி ஜெயரூபன் (ஆங்கில ஆசிரியர்) திருமதி ரஸ்லி குணதாசன் (ஆங்கில ஆசிரியை), மகன் திரு. பிரசாந்தன் (மருத்துவபீடம் போதனைப்பல்கலைக்கழகம்) ஆகியோர் தந்தையின் வழியில் பண்பாட்டாளர்களாக மிளிர்கின்றார்கள். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்ற மெய்ப்பிக்கும் பண்பாட்டாளர்களின் கூட்டுணர்வின் குடும்பமாக வைத்திய கலாநிதி. லயன். வை. தியாகராஜா அவர்களின் குடும்பம் மிளிர்கின்றது.

**சமூக சேவை முகாமைத்துவம்:**

எமது மண்ணில் இன்று சமூக சேவையாளர்களாப் பணியாற்றுபவர்கள் பல்வேறு சவால்களையும், வேதனைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கியே தமது சேவையை அர்ப்பணிக்க வேண்டிய மோசமான சூழ் நிலை காணப்படுகின்றது. இப் பொருத்தமற்ற நிலையில் சமூகத்தில் உள்ளோரின் நடவடிக்கையால் பாதிக்கப்படுவதைக் காட்டிலும் தன் சமூக சேவை நடத்தையால் முகாமைத்துவத்தினால் சமூக உறுப்பினர்களின் நடத்தையில் நன்மார்த்தை அதிக பாதிப்பை ஏற்படுத்தும் மனிதவள முகாமைத்துவ ஆளுமையின் பிறப்பிடாகவும் திரு. தியாகராஜா அவர்கள் திகழ்கின்றார். சமூகத்தில் மற்றவர்கள். பின்பற்றுவதற்கு முன்மாதிரியாகத் திகழும் அவளடைய பண்பியல் செயலாற்றுகை மற்றவர்களை சமாதானப்படுத்தியும், நெறிப்படுத்தியும் சமூகசேவை – பொது நோக்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ள இலக்குகளை எட்டிடும் ஆர்வமாக மிளிடுகின்றது. இது ஒரு வகை முகாமைத்துவத் திறனும் கூட தனது தொடர்பாடல் திறனால் பெருமளவு மக்களுடன் பழகி சமூக சேவையில் முகாமைத்துவ அடிப்படையில் தலைமைத்துவ ஆற்றலை ஒரு குணவனாகப் பெற்று சூழ்நிலைகளை முகாமை செய்யும் திறனுடையவராக சமூக சேவையில் குழு உணர்வோடு ஒன்றும் தன்மை (Identity With the Group) உள்ளவராக செயலாற்றி வருகின்றார். தியாகராசா அவர்கள் சமூக சேவைக் குழுத்தலைவர் தனது குழுவினருடன் ஒத்துணர்வு கொண்டு துடிப்புடன் செயற்பட வேண்டும். தன் கருத்தேற்றம் மூலம் குழு உறுப்பினர்களை குழுவின் பொது நோக்களுக்கு ஏற்ப இலக்குகள் நோக்கி சிந்திக்கவும், செயற்படவும் வைப்பவராகத் திகழ வேண்டும். உறுப்பினர்களை ஒருங்கிணைத்து – ஒருமுகப்படுத்துபவராக விளங்க வேண்டும். எல்லோரிடமும் பரிவுடன் உரவுகளை ஏற்படுத்திக் கொள்பவராக நடந்து கொள்ள வேண்டும். இவை ஒவ்வொன்றுக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த உதாரண மாணவராக விளங்குகின்றார். தியாகராஜா அவர்கள். இதற்கு அவருடைய பின் வரும் குணப் பண்புகள் மெருகேற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ***அறிவுக் கூர்மை*** – ஆழமான கூர்மையான அறிவுத்திறமை, வருமுன் உணரும் அறிவாற்றல்

2. ***ஒழுக்க உணர்வு*** – தன்னலம் கருதி ஒழுக்க உணர்வு, நேர்மை, நியாய உணர்வு, சத்தியத்தை நேசிக்கும் குணம். ஒழுங்கில் (Discipline) கவனம்

3. ***பொறுப்பு*** – கட்டுப்பாடு – சமூக சேவையை ஏனோதானோ என்றில்லாமல் மிகப் பொறுப்புடன் சேவையாற்றுதல். வகை கூறக்கூடியவராக (Accunablity) அர்ப்பணிப்புள்ளவராக (Dedication) கட்டுப்பாட்டுடன் செயலாற்றுதல்.

4. ***தீர்மானித்துச் செயற்படல்*** – பெயருக்கும் – புகழுக்குமாக அன்றி பொதுமையாக சமூக சேவைத்திட்டங்களை ஒழுங்கமைத்து வெற்றி கிடைக்கும் வரை போராடுதல்.

5. ***தன்னம்பிக்கை*** – தன்னம்பிக்கை கொண்டவராக தான் சார்ந்த சமூக சேவை உறுப்பினர்களை நல்வழியில் நடாத்திச் செல்பவராக இருத்தல்.

6. ***அமைப்பாளராதல்*** – சமூக சேவைத்திட்டங்களை நிறைவேற்ற தேவைப்படுவனவற்றையும் தனிமனிதர்களையும் ஓர் அமைப்பிற்குக் கொண்டு வருதல்.

7. ***மனம் தளராமை*** – பொறுமையுடன் ஒரு பக்கம் சாராமல் நல்லதையே எதிர்பார்த்து மன உறுதியுடன் சவால்களை எதிர்கொண்டு செயலாற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ***நல்லிணக்கமாக நடத்தல்*** – இரக்கம், கூட்டுறவு, மனிதாபிமானம் தொண்டுநோக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நல்லிணக்கமாகப் பொதுமக்களுடன் தொடர்பாடல்.

9. ***புத்தாக்கத்திறன்*** – சுயமாகச் சிந்தித்து, எதிர்கால நிலமை பற்றி ஆராய்ந்து புதிய விடயங்களை பொதுமக்கள் விரும்பும் நிலைக்கேற்ப செயற்படுத்தல்.

10. ***துடிப்பும் நெகிழ்வும்*** – சமூக சேவை நோக்கங்களை நிறைவேற்ற தான் சேர்ந்த சேவை நிறுவன பணியாளர்களின் நடத்தைகளில் துடிப்புடன் – நெகிழ்வுடனும் (Dynamicanal Flexible) ஈடுபட்டு திட்டத்தை நிறைவேற்றும் ஆற்றல்.

மேற் குறிப்பிட்ட அவருடைய பண்புகள் முகாமைத்துவ ஆற்றலைக் குறித்து நிற்கின்றன. ஆயிரம் நூல்களைக் கற்பதை விட ஒரு சமூக சேவைத்திட்டத்தை அல்லது ஒரு கருத்தைச் செயற்படுத்துவது மேலானது. இதற்கு மிகுந்த முகாமைத்துவ ஆற்றல் வேண்டும். எமது கிராமத்துப் பழமொழியான “ஆடுறமாட்டை ஆடிக்காக்க வேண்டும். பாடுறமாட்டைப் பாடிக்கறக்க வேண்டும்” என்ற கருத்தியல் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா அவர்களின் சமூக சேவையின் வெற்றிச் சூத்திரம் என்றே கூறலாம்.

